தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 033/ந/2022
நாள்.24.05.2022

திரு. இரா. சோனைமுத்து,
சிவகங்கை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி. – எதிர்மனுதாரர்

சிவகங்கை, தாகூர் தெரு, கதவு எண். 34/18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. சோனைமுத்து, என்பவரின் 30.01.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2022 அன்று பெறப்பட்டு 033/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை, தாகூர் தெரு, 34/18 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. சோனைமுத்து, என்பவர் தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"சிவகங்கை நகராட்சியில் 2020 மார்ச் மாதம் முதல் 2021 ஜூலை மாதம் வரை சுமார் ஒரு கோடி இருபது லட்சம் ரூபாய் வரை கொரோனா பணிக்காக செலவிடப்பட்டுள்ளது. இதில் பல லட்சம் ரூபாய் வரை முறைகேடு நடந்துள்ளது. மேலும் சுகாதார பிரிவில் பல முறைகேடுகள் நடந்துள்ளது.

1) இதில் எண்பதாயிரம் முக உறை வாங்க (ஒரு முக உறை – ரூ.15/– முதல் 11 வீதம்) சுமார் ரூ.8,45,000/– கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் மூன்று அடுக்கு முக உறை சில்லறை விலையில் மருந்தகங்களில் ரூ.4 முதல் 5–க்கு விற்கப்பட்டுள்ளது. ஆனால் சிவகங்கை நகராட்சி இரண்டு, மூன்று மடங்கு கூடுதல் விலைக்கு வாங்கியதில் சுமார் ரூ.4,50,000/– முறைகேடு செய்துள்ளது.

2) மறுமுறை பயன்படுத்தும் கையுறைகள் 7,000 ஜோடிகள். ஒரு ஜோடி ரூ.190 வீதம், ரூ.13,30,000/—க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வெளி சந்தையில் சில்லறை விலைக்கு அப்பல்லோ மருத்துவமனையில் ஒரு ஜோடி கையுறை அதிகபட்சம் விலை ரூ.45/—க்கு விற்கப்படுகிறது. ஆனால் சிவகங்கை நகராட்சி நிர்வாகம் நான்கு மடங்கு அதிக விலைக்கு வாங்கியதாக பத்து லட்சம் ரூபாய் முறைகேடு செய்துள்ளது.

3) கொரோனா தடுப்பு பணிக்கு Hand Sanitizer 400 லிட்டர். ஒரு லிட்டர் 1200 வீதம் ரூ.4,80,000/—க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசும், மாநில அரசுகளும் 200 மில்லி லிட்டர் Sanitizer ரூ.100/— முதல் ரூ.110/—க்கு தான் வாங்க வேண்டும் என அறிவிப்பு செய்துள்ளது. மேலும் சில்லறை விலைக்கு அப்பல்லோ மருத்துவமனையில் 500ml, 250 ரூபாய்க்குதான் விற்பனை செய்கிறது. ஆனால், நகராட்சி நிர்வாகம் ஒரு மடங்குக்கு மேல் கூடுதலான விலைக்கு வாங்கியுள்ளது. இதன் மூலம் ரூ.2,80,000/— முறைகேடு செய்துள்ளது. மேலும், Hand Sanitizer வாங்கியதாக நகராட்சி சொல்லும் (1) Baskaran Agency, 157 Palli Street, Sivagangai, (2) Kalaeswara Trader, 171 Gandhi Road, Sivagangai நிறுவனங்கள் இந்த முகவரியில் செயல்படவில்லை.

4) கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு தெர்மல் ஸ்கேன் கருவிகள் ஐம்பது எண்ணம் ஒன்று ரூ.6000/— வீதம் மூன்று லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு தெர்மல் ஸ்கேன்களுக்கு 1700 + 18% GST என மொத்தம் ரூ.2000/— என அறிவித்துள்ளது. மேலும் அப்பல்லோ மருத்துவமனையில் ரூ.1250/— முதல் ரூ.1750/— வரை சில்லறையில் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் சிவகங்கை நகராட்சி நிர்வாகம் இரண்டு மடங்கு கூடுதலாக கொடுத்து ரூ.2,00,000/— முறைகேடு செய்துள்ளது. மேலும் இந்த கருவி வாங்கியதாக நகராட்சி தீர்மானம் நிறைவேற்றிய (1) Baskaran Agency என்ற நிறுவனம் இந்த முகவரியில் செயல்படவில்லை. இதே முகவரியில் பல ஆண்டுகளாக பொன்செல்வி பலசரக்கு கடைதான் உள்ளது.

5) கொரோனா தடுப்பு பணிக்கு இரண்டு ஆயிரம் முழுகவச உடைகள் (PPE Kite) ரூ.890/— வீதம் ரூ.17,80,000/—க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு ஒரு முழுகவச உடை ரூ.273/— என நிர்ணயம் செய்துள்ளது. வெளிசந்தையில் ரூ.250/— முதல் ரூ.300/— வரை சில்லறை விலையில் விற்கப்படுகிறது. சிவகங்கை நகராட்சி நிர்வாகம் இரண்டு மடங்கு கூடுதலாக கொடுத்து ரூ.12,00,000/— முறைகேடு செய்துள்ளது.

6) கொரோனா விழிப்புணர்வு விளம்பரம் செய்யும் வகையில் நோட்டீஸ், பிளக்ஸ், பேனர்கள், சுவர் விளம்பரம் செய்ய ரூபாய் நான்கு லட்சம் செலவு செய்துள்ளது. இதில் உள்ளூர் விலை விகிதத்தை விட பத்து மடங்கு கூடுதலாக செலவு செய்ததாக கூறப்பட்டுள்ளது. இதில் 8 x 6 சைஸ் விளம்பர பிளக்ஸ்க்கும் முதலில் ஒன்றுக்கு ரூ.3400/— கொடுத்துள்ளார். பிறகு இதே அளவு விளம்பர பிளக்ஸ்க்கு ரூ.6800/— வீதம் கொடுத்துள்ளார். இந்த வகையில் ரூ.2,00,000/— வரை சிவகங்கை நகராட்சி நிர்வாகம் முறைகேடு செய்துள்ளது.

7) கொரோனா தொற்றுநோய் தடுப்பு பணிக்கு என தனியார் டிராக்டர், டிப்பர் 03.04.2020 முதல் 30.09.2020 வரை மாதம் ரூ.1,20,000/– வீதம் ரூ.7,24,000/– செலவு செய்ததாக தீர்மானம் இயற்றியுள்ளார். சிவகங்கை நகராட்சியில் டிப்பர் லாரி, டிப்போ வேன், டிப்போ டிராக்டர், ஆட்டோ என வாகனங்கள் இருந்தும் கொரோனாவை காரணம் காட்டி போலியாக ஒரு வாகனத்தை காட்டி ரூ.7,24,000/– முறைகேடு செய்துள்ளார். மேற்கண்ட பணிக்கு நகராட்சி பயன்படுத்தியதாக சொல்லும் TN63 AM 5301 டிராக்டர் விவசாய பயன்பாட்டிற்கான வாகனம், வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியாத ஒரு வாகனத்தை காட்டி முறைகேடு செய்துள்ளனர்.

8) சிவகங்கை நகராட்சியில் தகுதி சான்று பெறாத வாகனங்களுக்கு பல ஆண்டுகளாக ஓடாத வாகனங்களுக்கும் பழுது பார்த்ததாக பல லட்சம் ரூபாய் முறைகேடு நடந்துள்ளது. TN63 AC 1489 ஆட்டோ வாகனம், TN63 AC 1468 ஆட்டோ வாகனம் டெண்டருக்கும் 09.04.2020ம் தேதி பணி உத்தரவு வழங்கியதாக ரூபாய் பல லட்சம் முறைகேடு செய்துள்ளார். TN63 B 6459 டிராக்டர் வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய 30.03.2020ல் தீர்மானம் கொண்டு வந்து பழுது நீக்காமல் பல லட்சம் முறைகேடு செய்துள்ளார். TN63 F 9891 டிப்பர் பிளேசர் வாகனத்திற்கு 23.01.2020ல் டெண்டர் நடத்தி பாலசுப்பிரமணியன் ஆட்டோ கவரேஜ் மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வாங்கியதாக பல லட்சம் முறைகேடு நடந்துள்ளது. இதையே TN63 AM 2439, TN63 A 8702, TN63 AC 1606, TN63 AC 4447 ஆகிய வாகனங்களுக்கும் பழுது நீக்கியதாக பல லட்சம் முறைகேடு நடந்துள்ளது.

9) சிவகங்கை நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வீடுகளுக்கு குப்பை வாங்கும் பேட்டரி வாகனம் பழுது சரிசெய்ய டெண்டர் 09.09.2021ம் தேதி நடைபெற்றது. இரு டெண்டர்களிலும் முறைகேடு நடந்துள்ளது.

பத்து பேட்டரி வாகனங்கள் பழுது பார்க்க நகராட்சி நிர்வாகம் 12,68,635/–க்கு ஒப்பந்தம் செய்துள்ளது. ஒரு புதிய பேட்டரி வாகனத்தின் விலையே ரூ.1,80,000/–க்கு நகராட்சி நிர்வாகம் வாங்கியுள்ளது. ஆனால் ஒரு வண்டி பழுது சரிசெய்ய ரூ.1,20,000/–க்கு மேல் ஒதுக்கி முறைகேடு செய்துள்ளது.

எனவே, இதனை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.03.2022 நாளிட்ட கடிதம் மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது 18.04.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

"சிவகங்கை நகராட்சி மாவட்ட தலைநகரில் அமைந்துள்ள நகராட்சியாகும். தற்போதைய மக்கள் தொகை 51,679 ஆகும். அனைத்து அரசுத் துறை அலுவலகங்களும் இந்நகரில் அமைந்துள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை அரசு மருத்துவமனை

முதலானவை அமையப்பெற்றுள்ளன. சிவகங்கை நகர் பகுதியினை சுற்றி கிராமங்கள் அதிகம். அரசு மருத்துவமனை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள பிற நகரங்கள் கிராமங்களிலிருந்து மக்கள் அதிகம் வந்து செல்லும் இடமாகவும் சிவகங்கை நகரம் அமைந்துள்ளது.

கோவிட் – 19, தொற்று நோய் அச்சுறுத்தல் அதிக அளவு இருந்த காலகட்டத்தில் மேற்படி கோவிட் – 19 பெருந்தொற்றை எதிர்த்து போராடுவதற்கு (combating) அவசர நிலை தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும் நோய் தொற்று மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாகவும் தமிழ்நாடு அரசு ஊரடங்கு (Lock down) அறிவித்து அமலில் இருந்து வந்து நிலையிலும், கோவிட் நோயாளிகள் அதிகளவில் சிவகங்கை அரசு மருத்துவமனையில், மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வந்து Admit ஆகியபடியும் இருந்தனர். இறப்பு விகிதம் அதிகரித்து சிவகங்கை மின் மயானத்தில் அனைத்து சடலங்களும் எரியூட்டப்பட்டன.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நகர் பகுதியில் தொற்று நோய் மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாகவும், தேவையான கிருமி நாசினிகள். கிருமி நாசினி உபகரணங்கள். தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், நிவாரண மையங்கள் பராமரித்தல், மையங்களில் தங்கி உள்ளவர்களுக்கு உணவுப்பொருட்கள், நோயாளிகளின் சிகிச்சை தனிமைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான மருத்துவமனை உபகரணங்கள், தளவாடங்கள், மருந்துகள் மற்றும் நுகர்பொருள்கள் வாங்குதல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான அவசர சிவில் மற்றும் மின்சார பணிகள் முதலானவைகளுக்காக டெண்டர் சட்டத்தில் தமிழ்நாடு அரசு வெளிப்படைத் தன்மையிலிருந்து பொருட்கள் வாங்குவதற்கு, டெண்டர் Act 1998ன் பிரிவு 16 (a)ன் கீழ், நிதித்துறை செயலாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.74/JS(MA)/Finance (Salaries)/2020, நாள்.01.04.2020 கடிதத்தின்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று அதிகஅளவில் பரவிய காலத்தில், நோய்தடுப்பு பணிகளை கண்காணிக்க மாவட்ட வாரியாக, தலைமைச் செயலகத்திலிருந்து சிறப்பு இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளை நியமனம் செய்து, நோய் தடுப்பு நடவடிக்கைக்காக (திரு.மகேசன்காசிராஜன் மற்றும் திரு.கார்த்திகேயன் IAS) அவர்களால் கண்காணிக்கப்பட்டது. கோவிட் 19 குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் அரங்கில் கொரோனா கண்காணிப்பு நியமன அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அவ்வவ்போது அறிவுரை வழங்கப்பட்டு அதன்படி, போர்க்கால அடிப்படையில் இரவு பகல் பாராமல், மிகுந்த மன அழுத்தத்திற்கிடையே நகராட்சி பணியாளர்களால் மேற்படி தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

புகார்தாரர் திரு.இரா.சோனைமுத்து என்பவர் புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை ஆகும். இதுவரை நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக 216க்கும் மேற்பட்ட பெட்டிஷன் போட்டுள்ளார். யார் மீதாவது புகார் செய்வது பின்பு அவர்களிடம் நேரில் சென்று மிரட்டி பணம் வசூலிப்பது என தொடர்ந்து தொழிலாக செய்து வருவது அன்னாரது வழக்கம். மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதாக கூறப்படும் காலம் கொரானோ நோய் பரவல் அதிகமாக இருந்த காரணத்தினால் அரசால் முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டு அமலில் இருந்த ஆரம்ப காலகட்டம் ஆகும். கொரோனா தொற்று பரவல் அதிகமிருந்த முழு ஊரடங்கு காலகட்டத்தில் தொற்று நோய் தடுப்பு Disinfection பணி நகராட்சி நிர்வாகத்தின் மூலம் முழு வீச்சில் நடைபெற்றது. நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள நகராட்சி பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் உள், வெளி பணியாளர்களுக்கும் தேவையான முகவுறை மற்றும்

கையுறைகள் தயாரிப்பு இல்லாத, கிடைக்காத தட்டுப்பாடான நிலையில் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டும், பொருட்கள் கிடைக்கும் நிறுவனத்திடமிருந்து தேவைகளுக்கேற்ப தரமான பொருள் கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் எவ்வித முறைகேடோ, நிதி இழப்போ ஏதுமில்லை.

வரிசை எண்.1 மற்றும் 2க்கான பதில்

ஊரடங்கு காலகட்டத்தில் Covid 19 பெருந்தொற்று பரவலை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலையில் அவசர அவசியம் கருதி உரிய நிதித்துறை அவர்களின் கடித எண்.74/JS/(MA)/நிதி(ஊதியம்)/2020, நாள்.01.04.2020 வழிகாட்டுதல்படியும் உரிய நடவடிக்கைகளை பின்பற்றி முழு ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் பொருட்கள் உற்பத்தி இன்றி பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடான சூழ்நிலை இருந்த நிலையில், அன்றைய காலகட்டத்தில் இருந்த விலை விகிதத்தில் தரமான மூன்றடுக்கு முகவுரை ஆர்.சி. Fabrics Manufacturing industry, சிவகங்கை, நிறுவனத்தில் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.27.03.2020ல் ஒரு முகவுறை ரூ.14.30 விலைவிகித்ததில், 5000 எண்ணங்கள் ரூ.71,500/–க்கும், தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட் கோ சர்வீஸ், திருச்சி, நிறுவனத்தில் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்1. நாள்17.03.2020ல் FFSI Face mask ஒன்றுக்கு ரூ.45/– விலை விகித்தில் 17.03.2020ல் 10000 எண்ணம் ரூ.4,50,000/–க்கும், DMK Export and Import சிவகங்கை நிறுவனத்தில் விநியோக உத்தரவு எ்ண். 1948/2020/எச்.1 நாள்.06.05.2020ல் mask ஒன்றுக்கு ரூ.14.80/– விலைவிகிதத்தில் 10,000 எண்ணங்கள் ரூ.1,48,000/–க்கும், Reliant Global Green Engery & Co., கோயம்புத்தூர் நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1, நாள்.20.04.2020ல் 1 முகவுறை ரூ.14.50/– விலையில் 2500 எண்ணங்கள் ரூ.36,250/–க்கும், Ekaa Traders, காரைக்குடி நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.29.09.2020ல் முகவுறை ஒன்றுக்கு ரூ.11/–வீதம் 20,000 முகவுறை ரூ.2,20,000/–க்கும் தரமான மூன்றடுக்கு முகவுறை கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் மேற்படி நிறுவனத்தில் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.28.05.2021ல் மேற்படி விலை விகிதத்தில், 20,000 எண்ணம் முகவுறை ரூ.2,20,000/–க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. அவ்வப்போது இருந்த மார்க்கெட் விலை விகிதத்தில் முறையாக முதல்தரமான பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மறுமுறை பயன்படுத்தும் கையுறைகள், தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடமிருந்து விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.17.03.2020ல் ஒரு கையுறை ரூ.205/– விலை விகிதத்தில், 500 எண்ணங்கள் ரூ.1,02,500/–க்கும் மேற்படி விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.09.04.2020ல் 500 எண்ணம் ரூ.1,02,500/–க்கும் மேற்படி நிறுவனத்தில் 17.06.2020ம் தேதியில் மேற்படி விலைவிகிதத்தில் 1000 எண்ணங்கள் ரூ.2,05,000/–க்கும் Ekaa Traders, காரைக்குடி, நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.29.09.2020ல் மறுமுறை பயன்படுத்தக்கூடிய சிந்தடிக் கையுறை, 1 கையுறை ரூ.190/– விலை விகிதத்தில் 2000 எண்ணங்கள் ரூ.3,80,000/–க்கும் மேற்படி நிறுவனத்தில் 03.05.2021ல் மேற்படி விலைவிகிதத்தில் 1000 எண்ணம் ரூ.1,90,000/–க்கும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. துப்புரவுப்பணியாளர்கள் அலுவலக பணியாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பணியாளர்கள் உயிர்காக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்படி முதல் தரமான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் எவ்வித முறைகேடும் இல்லை.

வரிசை எண்.3க்கான பதில்

முழு ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் கொரோனா பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கையாகவும், பொதுமக்கள் மற்றும் நகராட்சி சுகாதார உள் மற்றும் வெளிப்புற பணியாளர்கள் உயிர்காக்கும் நடவடிக்கையாகவும், ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில், காளீஸ்வரா டிரேடர்ஸ், சிவகங்கை நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.27.03.2020ல் முதல்தரமான Palm care Hand Sanitizer Premeum லிட்டர் 1க்கு ரூ.1,000/– விலை விகிதத்தில், 100 லிட்டர் ரூ.1,00,000/–க்கும், பாஸ்கரன் ஏஜென்சி சிவகங்கை நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.02.07.2020ல் முதல் தரமான Sanitizer லிட்டர் 1க்கு ரூ.1000/– விலை விகிதத்தில், 200 லிட்டர் ரூ.2,00,000/–க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

பின்னாளில் மேற்படி விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.28.05.2021ல் ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் திண்டுக்கல் நிறுவனம் மூலம் 1லிட்டர் ரூ.800/– விலை விகிதத்தில் 100 லிட்டர் ரூ.80,000/–க்கு முதல் தரமான Hand Sanitizer கொள்முதல் செய்யப்பட்டது. அவ்வப்போது இருந்த மார்க்கெட் விலை விகிதத்திற்கு ஏற்ப பெருந்தொற்றின் அவசர அவசியம் கருதி, முறையாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் Hand Sanitizer கொள்முதல் செய்யப்பட்ட காளீஸ்வரா டிரேடர்ஸ், பாஸ்கரன் ஏஜென்ஸி நிறுவனம் மேற்படி முகவரியில் செயல்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி காளீஸ்வரா டிரேடர்ஸில் இருந்து பொருள் கொள்முதல் செய்யப்பட்டு CGST, SGST பிடித்தம் செய்யப்பட்டு GSTIN/UIN:33IIZPK 3723HIZS–ல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பில் தொகையானது முறையாக அன்னாரது காளீஸ்வரா டிரேடர்ஸ் நிறுவன A/Cல் A/C Payee காசோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது. அது போலவே பாஸ்கரன் ஏஜென்ஸி, சிவகங்கை நிறுவனத்தில் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களுக்கு CGST, SGST பிடித்தம் செய்யப்பட்டு GSTIN/UIN:33 BHWPB 8373FIZ2–ல் செலுத்தப்பட்டுள்ளது. பில் தொகையும் மேற்படி நிறுவனத்தின் பெயரில் Baskaran Agency நிறுவன A/Cல் A/C Payee காசோலை மூலம் அன்னாரது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் முறைகேடோ, விதிமீறலோ, நிதி இழப்போ ஏதுமில்லை.

வரிசை எண்.4க்கான பதில்

புகார்தாரர் குறிப்பிட்டுள்ள தெர்மல் ஸ்கேனர் கருவியானது 09.09.2020ல் நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரால் கொரானோ தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படியும் துப்புரவு ஆய்வர் 09.09.2020ம் தேதிய பரிந்துரையின்படியும் 50 எண்ணம் வாங்க முறையாக மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கொரானோ நோய் பரவல் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டு அப்போதிருந்த ஊரடங்கு காலத்தில் கருவிகள் கிடைப்பதில் ஏற்பட்ட கடும் தட்டுப்பாடு காரணமாக அவசர அவசியம் கருதியும் வீடு வீடாக, பொதுமக்கள் கூடும் இடங்களில் பஸ் ஸ்டாண்ட் உட்பட DBC worker மூலம் Fever Test செய்ய ஏதுவாக தரமான கருவிகள் பாஸ்கரன் ஏஜென்சி, சிவகங்கை நிறுவனம் மூலம் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.14.09.2020ல் முதல் தரமான Infrared thermal scanner (microtex) 1 எண்ணம் ரூ.5080/– விலை விகிதத்தில் 50 எண்ணம் ரூ.2,54,000/–க்கு அப்போதிருந்த

விலை விகிதத்தில் கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் எவ்வித விதிமீறலோ நிதி இழப்போ ஏதுமில்லை.

மேற்படி நிறுவனத்தின் GST எண்ணில் உரிய விதிமுறையின்படியே SGST, CGST பிடித்தம் செய்யப்பட்டு செலுத்தப்பட்டுள்ளது. பில் தொகை மேற்படி Baskaran Agency நிறுவனத்தின் பெயரில் முறையாக A/C Payee காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் விதிமீறலோ, முறைகேடோ நிதி இழப்போ ஏதுமில்லை.

வரிசை எண்.5க்கான பதில்

முழு ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் அன்றைய நிலையில் PPE கிட் கிடைப்பதில் கடும் தட்டுப்பாடு நிலவிய சூழ்நிலையில், சிவகங்கை நகராட்சியில் மாவட்ட தலைமை மருத்துவமனை அமைந்துள்ளபடியாலும், மாவட்டத்தின் பிற பகுதிகள் கிராமங்கள், நகரங்களிலிருந்து கொரோனா நோயாளிகள் பெருமளவில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்த நிலையில் கொரோனா இறப்பு விகிதம் அதிகம் இருந்த நிலையில், அனைத்து கொரோனாவால் இறந்த நோயாளிகளின் உடல்கள் சிவகங்கை நகராட்சி மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வந்த நிலையில், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட் கோ சர்வீஸ் திருச்சி நிறுவனத்தில் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.09.04.2020ல் ஒரு PPE கிட் விலை ரூ.1,140/– என்ற விகிதத்தில், 100 எண்ணம் ரூ.1,14,000/–க்கும் மேற்படி நிறுவனத்தில் மேற்படி விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.17.06.2020ன்படி ஒரு முழு கவச உடை ரூ.943/– விகிதத்தில் 500 எண்ணம் ரூ.4,71,500/– க்கும், மேலும் மேற்படி நிறுவனத்தில் விநியோக உத்தரவு எண்.1948/2020/எச்.1 நாள்.14.07.2020ல் ஒரு PPE கிட் ரூ.925/– விலை விகிதத்தில் 1000 எண்ணம் ரூ.9,25,000/–க்கும் அன்றைய காலகட்டத்தில் இருந்த விலைவிகிதத்தில், அவசர அவசியம் கருதி பொதுமக்கள் மற்றும் பொது சுகாதார பணியில் ஈடுபடும் பணியாளர்கள் உயிர்காக்கும் நடவடிக்கையாக உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு சிவமருது கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை நிறுவனம் மூலம் அப்போதிருந்த விலை விகிதத்தில் முந்தைய கொள்முதல் விலையை விட குறைவாக, முதல் தரமான PPE கிட் ஒன்று ரூ.890/– விலை விகிதத்தில் 500 எண்ணம் ரூ.4,45,000/–க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஊரடங்கு காலகட்டத்தில், பொருள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவிய காலத்தில், உரிய நடைமுறைகளை பின்பற்றியே பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நிதி இழப்பும் இல்லை.

வரிசை எண்.6க்கான பதில்

தமிழக அரசு நான்காம் கட்ட முழு ஊரடங்கில் வழங்கப்பட்டுள்ள சில ஊரடங்கு தளர்வுகள் அரசாணை 326, நாள் 04.09.2020ன்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி அபராத கட்டணம் அறிவிப்பு பூமியில் நிலை நிறுத்தக்கூடிய வகையில் 3இன்ச் பைப் மற்றும் Frame உடன் 8x6 அளவிலான விளம்பர பலகை பதாகையும், அன்றைய விலை நிலவரப்படி அவசர அவசியம் கருதி மேற்படி விளம்பர பதாகை அமைக்கப்பட்டது. உரியவகையில் மன்ற தீர்மானம் எண்.178, நாள்.30.09.2020ன் மூலம் நிறைவேற்றப்பட்டது. இதில் எவ்வித நிதியிழப்பும் இல்லை. மேற்படி 20 விளம்பர பலகைகளுக்கு ஆன பட்டியல் தொகை ரூ.1,33,280/– மட்டுமே வழங்கப்பட்ட நிலையில் ரூ.2,00,000/– முறைகேடு என்று புகார்தாரர் தெரிவித்துள்ளது உண்மைக்கு மாறானது.

வரிசை எண்.7க்கான பதில்

முழு ஊரடங்கு அமலில் இருந்த காலத்தில், கொரோனா தொற்று வேகமாக பரவும் சூழ்நிலையில் நகர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி மேற்காணும் கழிவுநீர் வாய்க்கால் தூர்வாரும் பணி போன்ற பணிகள் சுகாதார பணியாளர்களால் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், கொரோனா நோய் தொற்று தடுப்புப் பணியின் முக்கியத்துவம் கருதியும், நகராட்சியில் போதிய வாகனம் இல்லாத நிலையில், அவசர பணிக்காக ஒரு டிராக்டர், டிராக்டர் எண்.TN63 M 5301 என்ற வாகனம் நாள் வாடகை கணக்கில் எடுக்கப்பட்டது. மேற்படி வாகனம் பொது சுகாதார நலன்கருதி வாடகைக்கு எடுக்கப்பட்டு, பட்டியல் தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எவ்வித முறைகேடும் நிதி இழப்பு ஏதும் இல்லை.

வரிசை எண்.8க்கான பதில்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இவ்வாகனங்கள் அடிக்கடி பழுதடைந்த விடுவதால் பொது சுகாதாரப் பணி பாதிக்கப்படுவதால் கீழ்கண்ட வாகனங்களுக்கு உரிய வழிமுறைகளை பின்பற்றி பழுதுநீக்கப் பணி மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| TN 63 AC 1489 | ஆட்டோ வாகனம் பழுதுநீக்கி 03.06.2021ல் ரூ.59218/–க்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 AC 1468 | ஆட்டோ வாகனம் பழுதுநீக்கி 06.10.2021ல் ரூ.87766/–க்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 A 8702 | தெருவிளக்கு வாகனம் பழுதுநீக்கி 20.03.2020ல் ரூ.53771/–க்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 AC 1606 | JCB வாகனம் பழுதுநீக்கி 21.06.2021ல் ரூ.155286/–க்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 01.07.2021ல் ரூ.33152/– பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 AC 4447 | டிப்பர் லாரி வாகனம் பழுதுநீக்கி 03.12.2020 ரூ.49794/– பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 AM 1606 | விளம்பர ஆட்டோ வாகனம் பழுதுநீக்கி 24.12.2021ல் ரூ.3450/– பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. |
| TN 63 B 6459 | டிராக்டர் மற்றும் |
| TN 63 F 9891 | டிப்பர் பிளேசர் பழுதுநீக்கம் செய்யப்படவில்லை |

இந்நிகழ்வில் எவ்வித தவறும் நிதியிழப்பும் இல்லை.

வரிசை எண்.9க்கான பதில்

சிவகங்கை நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவிற்கு வீடு வீடாக சென்று குப்பை வாங்கும் பேட்டரி வாகனம் முழுவதுமாக சேதமடைந்த நிலையில் சேஸ் மற்றும் கேன்டில் மட்டுமே வாகனத்தில் மீதம் இருந்த நிலையில், பொதுசுகாதாரபணியின் அவசர அவசியத்தை கருதி, வாகன பழுதுநீக்கம் செய்ய 09.09.2021 ம் தேதி Ekaa Traders, காரைக்குடி,

நிறுவனத்திற்கு டெண்டர் வழங்கப்பட்டது. மேற்படி பேட்டரி வாகனங்களுக்கு பழுதுநீக்கப் பணி செய்து முடிக்கப்பட்டது. ஆனால் நாளதுவரை மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்கப்படவில்லை. நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் எவ்வித தவறும், நிதியிழப்பும் இல்லை.

புகார்தாரர் முழுஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் கிருமிநாசினிகள், கிருமிநாசினி உபகரணங்கள் பொருள் உற்பத்தியில் தட்டுப்பாடு நிலவிய காலகட்டத்தில் இருந்த விலை விகிதத்தையும், ஊரடங்கு சிறிது சிறிதாக தளர்வு அறிவிக்கப்பட்டு மேற்படி கிருமிநாசினி உற்பத்தி நிறுவனங்கள் செயல்படத் தொடங்கி பொருட்கள் பற்றாக்குறையின்றி, கிடைக்கப்பெற்ற காலத்தில் நிலவிய விலைவிகிதத்தையும் தற்போது முழுத்தளர்வு அறிவித்தபின்பு குறைந்துள்ள தற்போது உள்ள விலைவிகிதத்தோடு ஒப்பிட்டு குற்றம் சாட்டியுள்ளது முற்றிலும் உண்மைக்கு மாறானது.

புகார்தாரர் நாளதுவரை 216க்கும் மேற்பட்ட பெட்டிஷன்களை நகராட்சி பணியாளர்களை தனிப்பட்ட முறையில் விமர்சித்தும், ஒப்பந்தாரர்கள் மீது புகார் செய்தும் நிர்வாகத்திற்கு இடையூறாக பல புகார் மனுக்கள் போடுவதும் பின்பு அவர்களை தனிப்பட்ட முறையில் அழைத்து, பணம் கேட்டு மிரட்டுவது, அலுவலர்களை, ஒப்பந்த அடிப்படையில் வேலை கேட்டு மிரட்டுவது போன்ற செயல்களை செய்து வருவது இவரது வாடிக்கை. புகார்தாரர் நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளை கூறி புகார் அளித்துள்ளார். இம்மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. எங்களது பணிவான் விளக்கத்தினை ஏற்று இக்குற்றச்சாட்டு மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்படி, பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் திரு. இரா. சோனைமுத்து அவர்கள் 17.05.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

''சிவகங்கை நகராட்சியில் கொரானா பெருந்தொற்று நேரமான 2020 மார்ச் முதல் 2021 ஜூலை வரையிலான காலகட்டத்தில் முகக் கவசங்கள், கையுறைகள், Hand Sanitizer, தெர்மல் ஸ்கேன் கருவிகள், முழு கவச உடைகள் ஆகியவற்றை வாங்குவதில் நகராட்சியின் சுகாதாரப் பிரிவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. சானிடைசர் வாங்கியதாக கூறப்படும் பாஸ்கரன் ஏஜென்ஸி என்ற நிறுவனமே சிவகங்கை, 157, பள்ளித்தெருவில் இல்லை. ஆனால், முகவரியே இல்லாத ஒரு கடையில் மேற்கண்ட பொருட்களை வாங்கியதாக நகராட்சியினர் கணக்கு காட்டியுள்ளனர்.

மேலும், கொரானாவை காரணம் காட்டி விவசாயப் பயன்பாட்டிற்கான TN 53 AM 5301 எண் கொண்ட டிராக்டரை, நகராட்சிக்கு பயன்படுத்தியதாகவும், அதற்கான செலவுத் தொகை, ரூ 7,24,000 என தெரிவித்து முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். அதே போன்று திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனத்தின் விலை.ரூ. 1.80 லட்சம். ஆனால், அதனை பழுது நீக்குவதற்காக செலவான தொகை 1.40 லட்சம் என கணக்கு காட்டியுள்ளனர். எனவே, மேற்கண்ட முறைகேடுகளை விசாரித்து, முறைகேட்டில் ஈடுபட்ட அனைத்து நகராட்சி அதிகாரிகள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 30.1.2022 நாளிட்ட புகார் மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) எதிர்மனுதாரர்களான சிவகங்கை நகராட்சி மேலாளர் திரு.P. ராஜேஸ்வரன் மற்றும் சுகாதார அலுவலர் ச.விஜயகுமார் ஆகியோர் 17.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

“கோவிட் 19 பெருந்தொற்று நோய் அச்சுறுத்தல் அதிக அளவில் இருந்த மனுதாரர் கூறிய காலகட்டத்தில் நோய் தொற்று பரவாமல் இருக்க கிருமி நாசினிகள், முகக் கவசங்கள், கையுறைகள், தெர்மல் ஸ்கேனர்கள்,தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், மருந்துகள் மற்றும் நுகர் பொருள்கள் வாங்குதல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான அவசர சிவில் மற்றும் மின்சாரப் பணிகளை மேற்கொள்ள நிதித் துறை செயலரின் கடிதம் ந.க.எண் 74/JS(MA) / finance (salaries) 2020 நாள் 1.4.2020 கடிதத்தின் படி விலக்கு அளிக்கப்பட்டிருந்த காரணத்தினால், அவசர அவசியத்தை முன்னிட்டும், விலைப்புள்ளிகள் கோராமல், மேற்கண்ட அத்தியாவசியப் பொருட்கள் நகராட்சியால் வாங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே போன்று முழு ஊரடங்கு காலகட்டத்தில் அவசர பணிக்காக டிராக்டர் ஒன்று (எண் TN 63 AM 5301 என்ற வாகனம் நாள் வாடகை கணக்கில் எடுக்கப்பட்டது. மேற்கண்ட வாகனம் பொது சுகாதார நலன்கருதி வாடகைக்கு எடுக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை, அதே போன்று வீடு வீடாக குப்பைகளை பெறும் பேட்டரி வாகனம் முழுவதும் சேதமடைந்த நிலையில் அதனை அவசர அவசியத்தை முன்னிட்டு பழுது பார்க்க 9.9.2021 அன்று Ekaa Traders காரைக்குடி என்கின்ற நிறுவனத்திற்கு டெண்டர் வழங்கப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளது. ஆனால், அதற்கான தொகை அந்நிறுவனத்திற்கு இன்னும் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் சிவகங்கை நகராட்சி ஆணையரின் 18.4.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்''.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி மேலாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர், சிவகங்கை நகராட்சியில் கொரோனா பெருந்தொற்று பரவிய 2020 மார்ச் முதல் 2021 ஜூலை வரையிலான காலகட்டத்தில் முகக்கவசங்கள், கையுறைகள், தெர்மல் ஸ்கேன் கருவிகள் போன்ற கொரோனா நோய் தடுப்பு சாதனங்களை கொள்முதல் செய்ததிலும், முகவரியே இல்லாத கடையில் பொருட்கள் வாங்கியதிலும், விவசாய டிராக்டரை வாடகைக்கு பயன்படுத்தியதாகவும் மற்றும் பேட்டரி வாகனத்திற்கு பழுது நீக்குவதற்கு பெருந்தொகை செலவு செய்ததிலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் புகார் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட காலகட்டமான கொரோனா நோய் பரவிய 2020 மார்ச் முதல் 2021 ஜூலை வரையிலான காலத்தில், அரசு துறையால் நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்தக் கூடிய பொருட்களை கொள்முதல் செய்வதற்கு நிதித்துறையால் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு விலக்களித்து ஆணையிடப்பட்டது. எனவே நிதித்துறையின் வழிகாட்டுதல்படி, பொருட்கள் உற்பத்தியின்றி, அவை கிடைப்பதில் தட்டுப்பாடுகள் இருந்த சூழ்நிலையிலும், முழு ஊரடங்கு அமலில் இருந்த போதிலும், சிவகங்கை அரசு மருத்துவமனையில் எண்ணற்ற கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும் மற்றும் சிவகங்கை நகராட்சி முழுவதும் இந்நோய் பரவாமல் தடுக்க வேண்டியும், முகக்கவசங்கள், கையுறைகள், Hand Sanitizer, தெர்மல் ஸ்கேன் கருவிகள் போன்றவைகள் அன்றைய காலகட்டத்தில் இருந்த விலைவிகிதத்தில் பொருட்கள் கிடைக்கும் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டதை சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

முழுஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் கிருமிநாசினிகள், கிருமிநாசினி உபகரணங்கள் பொருள் உற்பத்தியில் தட்டுப்பாடு நிலவிய காலகட்டத்தில் இருந்த விலை விகிதத்தையும் ஊரடங்கு சிறிது சிறிதாக தளர்வு அறிவிக்கப்பட்டு மேற்படி கிருமிநாசினி உற்பத்தி நிறுவனங்கள் செயல்படத் தொடங்கி பொருட்கள் பற்றாக்குறையின்றி, கிடைக்கப்பெற்ற காலத்தில் நிலவிய விலைவிகிதத்தையும் தற்போது முழுத்தளர்வு அறிவித்தபின்பு குறைந்துள்ள தற்போது உள்ள விலைவிகிதத்தோடு ஒப்பிட்டு மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்ற ஆணையரின் அறிக்கை ஏற்புடையதாகவே உள்ளது.

மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்ட சிவகங்கையில் உள்ள பாஸ்கரன் ஏஜென்ஸி மற்றும் காளீஸ்வரா டிரேடர் என்ற நிறுவனங்களில் இருந்து Hand Sanitizer கொள்முதல் செய்ததற்கு வரி பட்டியல்கள் (Tax Invoice) நகராட்சி நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டாலும், மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டவாறு அக்கடைகள் அதே முகவரியில்தான் செயல்படுகின்றன என்பதற்கு ஆதார ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

தவிர, சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டிற்கு வாகனங்கள் இருக்கும் நிலையில் விவசாய டிராக்டரை வாடகைக்கு பயன்படுத்தியதும் அறிக்கையின் மூலம் அறியமுடிகிறது. இருப்பினும், உரிய விதிமுறைகளின்படி வாடகைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதற்கான ஆதார ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேலும், சிவகங்கை நகராட்சியின் சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு சார்ந்த ஆட்டோ வாகனம், JCB வாகனம், தெரு விளக்கு பழுது நீக்கும் வாகனம் போன்றவற்றிற்கு பழுது நீக்குவதற்கு பெருந்தொகை செலவிடப்பட்டுள்ளதும், ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

குப்பை சேகரிக்கும் புதிய வாகனம் ஒன்றின் விலை ரூ.1.80 இலட்சம் என இருக்கும் நிலையில், பழைய குப்பை வாகனத்திற்கு பழுது நீக்கு செலவு ரூ.1.20 இலட்சம் என மனுதாரர் புகாராக தெரிவித்ததும், நகராட்சி நிர்வாகத்தினர் பழுது நீக்க பணிக்கு Ekaa Traders, காரைக்குடி நிறுவனத்திற்கு டெண்டர் வழங்கியதும், மேற்படி பழுது நீக்க பணி முடிவுற்றும், பழுது பார்ப்பு செலவிற்கு மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்கப்படாமல், நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதும் விசாரணையில் அறியமுடிகிறது.

எனவே, மேற்கண்ட புகார்கள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து, கொரோனா நோய் தொற்று பரவிய காலகட்டமான 2020 மார்ச் முதல் 2021 ஜூலை வரை கொரோனா நோய் தொற்று பரவலை தடுக்கும் வகையில் சிவகங்கை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்தான அனைத்து கோப்புகளையும் ஆராய்ந்து உரிய விசாரணை மேற்கொண்டு ஆய்வு அறிக்கையினை 2 மாத காலத்திற்குள் பெற்று, ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கைகளை தொடருமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், கொரோனா நோய் தொற்று கால கட்டங்களில் சிவகங்கை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை ஆவணங்களுடன் ஆய்வு செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் சிறப்பு ஆய்வு (Local Fund Audit – Special Audit) ஒன்றினை மேற்கொண்டு, தணிக்கை அறிக்கையில் விதி மீறல்கள்/தவறுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், தவறுகளுக்கு காரணமான அனைத்து அலுவலர்கள் மீதும் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Director of Municipal Administration is requested to constitute a Committee of senior officials of the Head office to examine the detailed allegations of the petitioner and on receipt of the findings proceed further with disciplinary action against the delinquents if the allegations are proved. This is to be completed within two months.

Similarly the Director of Local Fund Audit is directed to verify the purchases, monetary transactions, vouchers etc., involved in the allegations that may cause drain on the Local Body Budget and communicate the findings to DMA for further action within a period of 3 months.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. சோனைமுத்து,
34/18, தாகூர் தெரு,
சிவகங்கை – 630 561.

2) ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி.
சிவகங்கை – 630 561.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
நெ.571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவல ர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக